winmeen.com

# NOTES

# QUESTIONS

## 6ஆம் வகுப்பு தமிழ்
## இரண்டாம் பருவம்



## 6ஆம் வகுப்பு இரண்டாம் பருவம்

## தமிழ் ஒரு மதிப்பெண் இரண்டு மதிப்பெண் வினாக்கள்

### 1. கண்ணெனத் தகும்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர்கள் நூல்களை _______ க் கற்க வேண்டும்.

அ. மேலோட்டமாக **ஆ. மாசற** இ. மாசுற ஈ. மயக்கமுற

2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. இடம் + மெல்லாம் ஆ. **இடம் + எல்லாம்**

இ. இட + எல்லாம் ஈ. இட + மெல்லாம்

3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. மச + அற ஆ. **மாசு + அற** இ. மாச+உற ஈ. மாசு +உற

4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. **குற்றமில்லாதவர்** ஆ. குற்றம் இல்லாதவர்

இ. குற்றமல்லாதவர் ஈ. குற்றம் அல்லாதவர்

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. சிறப்புஉடையார் ஆ. **சிறப்புடையார்**

இ. சிறப்படையார் ஈ. சிறப்பிடையார்

6. 'மன்னனும்' எனத்தொடங்கும் பாடல் அமைந்திருக்கும் நூல் _________

அ. ஆத்திச்சூடி ஆ. கொன்றைவேந்தன் **இ. மூதுரை** ஈ. நல்வழி

7. மூதுரை நூலின் ஆசிரியர்

அ. **ஒளவையார்** ஆ. பொன்முடியார் இ. குமர குருபரர் ஈ. சிவப்பிரகாசர்


winmeen.com

**குறுவினாக்கள்**

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

மன்னனையும் மனக்குற்றம் நீங்கும்படி கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் கற்றவரே மன்னனைக் காட்டிலும் சிறந்தவர். ஏனென்றால், மன்னனுக்கு அவனது நாட்டில் மட்டும் சிறப்பு உண்டு. கல்வி கற்றவருக்கோ அவர் செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்பு உண்டாகும்.

**2. மூதுரை – குறிப்பு வரைக.**

மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள். சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது. இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் ஔவையார்.

**3. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

எத்தனையோ செல்வங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மூன்று. அருட்செல்வம் அவ்வுலகத்துக்கு உரியது. பொருட் செல்வம் இவ்வுலகத்துக்கு உரியது. கல்விச் செல்வம் எவ்வுலகத்தும் சிறப்புத்தருவது ; ஏழு பிறப்புகளிலும் உதவுவது; கொடுத்தால் குறையாது; புகழ் தருவது; அழியாதது. இவற்றுள் "கொடுத்தால் குறையாது" என்பதையே கல்வியின் சிறப்பாக நான் கருதுகிறேன்.

**4. கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

**கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகள்:**

1. கல்லாதவர்க்குச் சான்றோர் அவையில் மதிப்பு இருக்காது; அங்கு அவர் அமைதியாய் இருப்பது ஒரு நாய் இருப்பது போன்றது; ஏதாவது பேசினால் அது நாய் குரைப்பது போன்றது.
2. கல்லாதவர் அறிவு சில சமயங்களில் – சமயோசிதமாய் – வெளிப்பட்டாலும் அதனை அறிவுடையார் ஏற்கமாட்டார்.
3. கல்லாதவர், அரசு அலுவலகங்கள், வங்கிகள் முதலியவற்றிற்குச் சென்றால் தம்முடைய பணிகளை முடிக்க இடர்ப்படுவர்; பிறர் உதவியை நாடியே நிற்பர்.
4. தம்மிடம் உள்ள பணத்தை எண்ணிக்கையிடவும் தெரியாமல் திண்டாடுவர்.

**கல்வியே அழியாத செல்வம்**

கல்வி என்பது வாழும் உயிர்களுக்கெல்லாம் பொது. ஒரு செடி கதிரவனது ஒளியைப் பெறுவதற்காகச் சற்றே வளைவது அதன் கல்வி எனலாம். தாயினை நன்றாகப் பிடித்துக் கொள்ளத்

தெரியாத குரங்குக் குட்டியைக் 'கல்லாவன்பறழ்' என நூல்கள் கூறும். குழந்தை பிறந்தது முதலாகக் கற்கத் தொடங்கிவிடுகிறது. கண்டும் கேட்டும் அறிவைப் பெறும் குழந்தை வாசிக்கக் கற்றுக்கொள்ள எடுத்துக் கொள்ளும் நிலையையே 'கல்விகற்றல்' என்கிறோம்.

கல்வியின் பெருமையை எடுத்துக் கூறும் நூல்கள் பல. மனிதனுக்குக் கண் போன்றது கல்வி என்பார் திருவள்ளுவர். எண் எழுத்து இகழேல் என ஆத்திசூடியிலும், எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் எனக் கொன்றை வேந்தனிலும் ஔவையார் கூறுவார். கல்வியின் பிரிவுகள் பலப் பல. ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். இன்றைக்கோ அவை பல நூறு என வளர்ந்து விட்டன. பழங்காலத்துக் கல்வியாகிய 'போர்க்கல்வி' தொடங்கி இன்றைய கணினிக் கல்விவரை அனைத்தும் மனித இனவளர்ச்சியின் அடையாளங்களே. 'கல்வி கரை இல, கற்பவர் நாள் சில' என நாலடியார் என்னும் நூல் சொல்வது உண்மையே!

கல்விச் செல்வம் அழிவற்றது. பொருட் செல்வம் அழியும் தன்மையுடையது.

**'கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடல்ல மற்றை யவை'**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**வைப்புழிக் கோட்படா, வாய்த்து ஈயின் கேடு இல்லை**

**மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்**

**எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன**

**விச்சை மற்று அல்ல பிற**

என்பது நாலடியார்.

"வெள்ளத்தே போகாது; வெந்தணலில் வேகாது; கொள்ளத்தான் போகாது;

கொடுத்தாலு குறையாது ; கள்ளருக்கும் எட்டாது; காவலுக்குள் அமையாது" என்று கல்வியின் பெருமையைப் பெரியோர் கூறுவர்.

அழியாத செல்வமாகிய கல்வியைச் சேர்ப்போம். அழியாத புக்ழை ஈட்டுவோம்.

1. கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே - வெற்றிவேற்கை

2. மலைவாழை அல்லவோ கல்வி – நீ

வாயார உண்ணுவாய் போ என் புதல்வி - பாரதிதாசன்

## துன்பம் வெல்லும் கல்வி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர் பிறர் ______ நடக்கக் கூடாது.

அ. போற்றும்படி **ஆ. தூற்றும்படி** இ. பார்க்கும்படி ஈ. வியக்கும்படி

2. நாம் ______ சொற்படி நடக்க வேண்டும்.

அ. இளையோர் ஆ. ஊரார் **இ. மூத்தோர்** ஈ. வழிப்போக்கர்

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. கையில் + பொருள் ஆ, கைப் + பொருள்

**இ. கை+பொருள்** ஈ. கைப்பு + பொருள்

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ. மானம்இல்லா **ஆ. மானமில்லா** இ. மானமல்லா ஈ. மானம்மில்லா

5. துன்பத்தை வெல்லும் ______ வேணும்.

**அ. கல்வி** ஆ. செல்வம் இ. துணிவு ஈ. காலம்

**II. சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**1. மனமாற்றம் :** கலிங்கப்போரில் அசோகர்க்கு மனமாற்றம் ஏற்பட்டது.

**2. ஏட்டுக்கல்வி :** ஏட்டுக் கல்வி வாழ்க்கைக்கும்ப் பயன்பட வேண்டும்.

**3. நல்லவர்கள் :** உலகில் நல்லவர்கள் பலர் உள்ளனர்.



winmeen.com

**4. சோம்பல்** : சோம்பல் தவிர்த்தால் வாழ்வில் உயரலாம்.

**III. குறுவினாக்கள்**

**1. நாம் யாருடன் சேரக் கூடாது?**

தன்மானம் இல்லாத கோழைகளுடன் நாம் சேரக் கூடாது.

**2. எதை நம்பி வாழக் கூடாது?**

மற்றவர் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது.

**3. இந்தப் பாடலின் முதல் இருவரிகள் நினைவூட்டும் திருக்குறள் எது?**

ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே – நீ

ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே.

இந்த வரிகள் நினைவூட்டும் திருக்குறள்:

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக.

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?**

வெற்றிமேல் வெற்றி வரவும், அவற்றால் பெருமை பெறவும் மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும்.

**5. நாம் எதை மறந்துவிடக் கூடாது?**

நாம் கற்றதன் பயனை மறந்துவிடக் கூடாது.

**6. நாம் எப்படி நடக்கக் கூடாது?**

நாம் நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது.

**7. நாம் எவற்றை மீறக் கூடாது?**

நாம் பெரியோர் சொல்லும் அறிவுரைகளை மீறக் கூடாது.

**8. நாம் எதை விட்டு விட வேண்டும்?**

பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை நாம் விட்டுவிட வேண்டும்.

**9. வற்றாமல் நம்மோடு வாழவேண்டியவை யாவை?**

பெற்ற தாயின் புகழும் பிறந்த நாட்டின் புகழும் வற்றாத வகையில் நாம் வாழ வேண்டும்.

**10. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திற்கு உரிய சிறப்புப் பெயர் யாது?**

பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரத்திற்கு உரிய சிறப்புப் பெயர் " மக்கள்" கவிஞர் என்பது.

**11. நாம் எவ்வாறு வாழக்கூடாது எனப் பட்டுகோட்டையார் கூறுகிறார்?**

நாம் நூல்களைக் கற்பதோடி இருந்துவிடக்கூடாது; கற்றதன் பயனை மறக்கக் கூடாது; நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது; நல்லவர்கள் குறை சொல்லும்படி வளரக் கூடாது;

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக்கூடாது; பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்பு நெறி மாறக் கூடாது; பிறர் உழைப்பில் வாழக் கூடாது; தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

**12. நாம் எவற்றையெல்லாம் கொள்ள வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?**

நாம், துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும்; சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்; வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி நடக்க வேண்டும்; இவை மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெற வேண்டும்; பெற்ற தாயின் புகழும் நம் நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

**13. பட்டுக்கோட்டையார் பாடற் பொருளைத் தொகுத்துக் கூறுக.**

நாம் நூல்களைக் கற்பதோடு இருந்துவிடக்கூடாது; கற்றதன் பனை மறக்கக் கூடாது; நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது. நல்லவர்கள் குறை சொல்லும்படி வளரக் கூடாது;

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக்கூடாது; பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்பு நெறி மாறக் கூடாது; பிறர் உழைப்பில் வாழக் கூடாது; தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது; பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும்.

நாம் துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும்; சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்; வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி நடக்க வேண்டும்; இவை மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெற வேண்டும்; பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

வரும்பகைவர் படைகண்டு

மார்தட்டிக் களம் புகும்

மக்களைப் பெற்றோர் வாழ்க!

மனம் கொண்ட துணைவர்க்கு

விடைதந்து வேல்தந்த

மறக்குலப் பெண்கள் வாழ்க!

உரங்கொண்டு போராடி

உதிரத்தில் நீராடி

அறம் காத்த உன்னம் வாழ்க!

திறமான புகழ்கொண்ட

திடமான தோள்களும்

செயல் வீரர் மரபும் வாழ்க!

- **பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்**

## கல்விக்கண் திறந்தவர்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் _______

அ. ஆடு மேய்க்க ஆள் இல்லை **ஆ. ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**

இ. வழி தெரியவில்லை ஈ. பேருந்து வசதியில்லை

2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ. **பசி + இன்றி** ஆ. பசி+யின்றி இ. பசு +இன்றி ஈ. பசு + யின்றி

3. காடு+ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது______

அ. **காட்டாறு** ஆ. காடாறு இ. காட்டுஆறு ஈ. காடுஆறு

4. படிப்பறிவு என்னும்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

அ. **படிப்பு + அறிவு** ஆ. படிப்பு+அறிவு இ. படி+அறிவு ஈ. படிப்பு+ வறிவு

5. _______ தூரத்தில் ஆரம்பப் பள்ளி, ______ தூரத்தில் நடுநிலைப் பள்ளி, _______ தூரத்தில் உயர்நிலைப்பள்ளி இருக்க வேண்டும் என்று காமராசர் திட்டம் வகுத்தார்.

அ. ஐந்து மைல், ஒரு மைல், மூன்று மைல்

ஆ. **ஒரு மைல், மூன்று மைல், ஐந்து மைல்**

இ. மூன்று மைல், ஒரு மைல், ஐந்து மைல்

ஈ. ஒரு மைல், ஐந்து மைல், மூன்று மைல்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ) வகுப்பு :** நான் ஆறாம் வகுப்பு மாணவன்.

**ஆ) உயர்கல்வி :** உயர்கல்வி கற்க வெளியூருக்குப் போவேன்.

**இ) சீருடை :** சீருடை அணியாத மாணவனை ஆசிரியர் கண்டித்தார்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகளைப் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்கச் ______ அறிமுகப்படுத்தினார்.

**விடை: சீருடைத் திட்டத்தை**

2. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனமாரப் பாராட்டியவர்________

**விடை: தந்தை பெரியார்**

**குறுவினாக்கள்**

**1. காமராசர் காலத்தில் தொடக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?**

காமராசர் காலத்தில் தொடக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பொறியியற் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் என்பன.

**2. காமராசர் முதல்வராய்ப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?**

காமராசர் முதல்வராய்ப் பொறுப்பேற்ற நேரத்தில் தமிழகத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டிருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.இதுவே கல்விக்காக அவர் செய்த முதற் பணி.

**3. காமராசரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**

காமராசரின் சிறப்புப் பெயர்கள்: பெருந்தலைவர், கறுப்பு காந்தி, படிக்காத மேதை, ஏழைப் பங்காளர், கர்ம வீரர், தலைவர்களை உருவாகுபவர், கல்விக்கண் திறந்தவர், கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர்.

**4. காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக.**

பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் தேசியக் கொடி ஏற்றுமாறு அழைக்கக் காமராசர் எழுந்தார். அனைவரும் எழுந்து நின்றார்.அப்போது ஒரு மாணவன் மயங்கிக் கீழே விந்தான். அனைவரும் பதற்றம் அடைந்தனர். தண்ணீர் தெளித்து அவனை எழுப்பினர்.

மயக்கம் தெளிந்த சிறுவனிடம் அவர் "காலையில் சாப்பிட்டாய" எனக் கேட்டார். அவன் "எதுவும் சாப்பிடவில்லை" என்றான். அதறு அவர் "ஏன்?" என்று கேட்டார். மாணவன் "சாப்பிட எதுவும் இல்லை" என்று பதில் கூறினான். இதற்குப் பிறகு படிக்க வரும் மாணவர்களுக்கு ஒருவேளை உணவாவது வழங்க வேண்டும் என்று முடிவு செய்தார் அவர். காமராசரின் மதிய உணவுத் திட்டம் இவ்வாறு உருவானது.

**5. காமராசர் கல்விப் புரட்சிக்கு வித்திட்டவர் என்பதை விளக்குக.**

காமராசர் முதல் அமைச்சராய்ப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆனையிட்டார். மாநிலம்

முழுக்க அனைவரும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார். மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை தொடக்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார்.

**6. காமராசருக்குத் தமிழக அரசு செய்துள்ள சிறப்புகள் யாவை?**

- மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ‘மதுரை காமராசர் பல்கலைக்கழகம்’ எனப்பெயர் சூட்டப்பட்டது.
- நடுவண் அரசு 1976 இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் மற்றும் விருதுநகர் இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.
- சென்னை மெரினா கடற்கரையில் சிலை நிறுவப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

**நூல்களின் பட்டியல்**

1. அக்னிச் சிறகுகள் - ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்
2. அழகின் சிரிப்பு - பாரதிதாசன்
3. என் சரித்திரம் - டாக்டர் உ.வே.சாமிநாதையர்
4. கப்பலோட்டிய தமிழர் - ம.பொ.சி
5. கல்லோ? காவியமோ? - இன்பசேகரன்
6. கள்ளோ? காவியமோ? - டாக்டர்.மு.வ.
7. கிரௌஞ்சவதம் - காண்டேகர் (கா.ஸ்ரீ.ஸ்ரீ)
8. கீதாஞ்சலி - தாகூர்
9. சத்திய சோதனை - மகாத்மாகாந்தி
10. சீறாப்புராணத் திறனாய்வு - சிலம்பொலி செல்லப்பன்
11. தமிழ்க் காதல் - டாக்டர். வ.சுப. மாணிக்கம்
12. திருக்குறள் - திருவள்ளுவர்
13. திருவாசகம் - மாணிக்கவாசகர்

14. தேம்பாவணி ஆராய்ச்சி - மரிய அந்தோணி
15. பத்துப்பாட்டு ஆராய்ச்சி - டாக்டர். மா. இராசமாணிக்கனார்
16. பொன்னியின் செல்வன் - கல்கி
17. மலரும் மாலையும் - கவிமணி
18. மலைக்கள்ளன் - நாமக்கல் கவிஞர்
19. வீரவாஞ்சி - ம. கண்ணன்
20. ஜய ஜய சங்கர - ஜெயகாந்தன்

**கவிமணி**

சிறப்புகள்: செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு மலரும் மாலையும் என்றும் உரிமையாகும்.

நூல்கள்: மலரும் மாலையும், தேவியின் கீர்த்தனங்கள், ஆசிய ஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம். காந்தளூர்ச் சாலை, கவிமணியின் உரைமணிகள் என்பன இவருடைய படைப்புகள்.

காலம்: 27.7.1876 – 26.9.1954

**இன எழுத்துகள்**

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ. மஞ்சள் ஆ. வந்தான் இ. **கல்வி** ஈ. தம்பி

2. தவறான சொல்லை வட்டமிடுக.

அ. கண்டான் **ஆ. வென்ரான்** இ. நண்டு ஈ. வண்டு

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

| **பிழையான சொல்** | **திருத்தம்** |
|---|---|
| தெண்றல் | தென்றல் |
| கன்டம் | கண்டம் |
| நன்ரி | நன்றி |

மன்டபம் மண்டபம்

**சிறுவினா.**

**1. இன எழுத்துகள் என்றால் என்ன?**

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

**2. இன எழுத்துகள் எவ்வாறு அமைகின்றன?**

ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

**3. உயிர் எழுத்துகளில் இன எழுத்துகள் யாவை?**

மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

**இருபொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமைக்க.**

**(நூல், மாலை, ஆறு, படி)**

**1. நூல்** - ஆடை தைக்க உதவுவது நூல்.

- மூதுரை அற நூல்

**2. மாலை** - பூக்களால் உருவாவது மாலை.

- பகலுக்கும் இரவுக்கும் இடைப்பட்ட நேரம் மாலை.

**3. ஆறு**- ஐந்துக்கு அடுத்த எண் ஆறு.

- ஊருக்கு அழகு தருவது ஆறு.

**4. படி** - மாடிக்குப் போக உதவுவது படி.

- நூலைப்படி.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது?**

**(குழந்தைகள் தினம், மாணவர் தினம், ஆசிரியர் தினம், தெசிய இளைஞர் தினம், கல்வி வளர்ச்சி நாள்)**

1. காமராசர் பிறந்த நாள் **கல்வி வளர்ச்சி நாள்.**

2. டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் பிறந்த நாள் **ஆசிரியர் தினம்.**

3. அப்துல்கலாம் பிறந்த நாள் **மாணவர் தினம்.**

4. விவேகானந்தர் பிறந்த நாள் **தேசிய இளைஞர் தினம்.**

5.ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் **குழந்தைகள் தினம்.**

## காமராசர்

**முன்னுரை:**

பெருந்தலைவர், படிக்காத மேதை, கர்ம வீரர், கறுப்புக் காந்தி என்றெல்லாம் மக்களால் போற்றப்படுபவர் காமராசர். அவருடைய இளமைக்காலம், கல்விப்பணி, தொண்டுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இளமைக் காலம்:**

காமராசர் தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள விருதுநகரில் 15.7.1903 இல் பிறந்தார். இவர் தந்தை குமாரசாமி ; தாய் சிவகாமி. காமராசர் இளமையிலேயே துணிவும் பொறுமையும் நுட்பமான அறிவும் உடையவராய் விளங்கினார். ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போதே படிப்பு நிறுத்தப்பட்டது. தாய்மாமன் கடையில் வியாபார அனுபவம் பெறக் காமராசர் அனுப்பப்பட்டார். காமராசர் பத்திரிக்கைகள் படித்தும் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்றும் அரசியலில் ஈடுபாடு கொண்டார்; உப்புச் சத்தியாக் கிரகம் சட்டமறுப்பு இயக்கம் , வெள்ளையனே வெளியேறு இயக்கம் எனப்பல போராட்டங்களில்

கலந்து கொண்டு சிறப்பட்டார். பல காலம் பல போராட்டங்களில் ஈடுபட்ட்தால் சிறையில் கழித்த மொத்த நாள்கள் 3000 எனப் புள்ளி விவரம் கூறுகிறது.

**காமராசரின் கல்விப்பணிகள்:**

காமராசர் 1954 இல் தமிழ் நாட்டின் முதலைச்சரானார். காமராசர் முதல் அமைச்சராய்ப்பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார். மாநிலம் முழுக்க அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்கமதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார். மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைத் தொடங்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார்.

**நிறைவேற்றிய பிறதிட்டங்கள்:**

காமராசர் ஒன்பது ஆண்டுகாலம் முதலமைச்சராய் இருந்தார். சென்னைத் துறைமுக விரிவாக்கம், நெய்வேலி நிலக்கரித் திட்டம், நீலகிரித் திரைப்படச் சுருள் தொழிற்சாலை, கிண்டி ஆறுவைச் சிகிச்சைத் தொழிற்சாலை. ஆவடி ரயில்வே வானத் தொழிற்சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை. குந்தா மின்திட்டம் முதலிய பல அவரது ஆட்சிக் காலத்தில் செயற்பாட்டுக்கு வந்தன.

**முடிவுரை:**

காமராசர் காந்தியவாதி, நேர்மையான தொண்டர்; தூய்மையான அரசியல்வாதி. காந்தி பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள் காமராசர் மறைந்தார். ஆண்டு 1975. என்றென்றும் அவர் புகழ் நிற்கும். காமராசரது பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## 2. பாடறிந்து ஒழுகுதல்

## கவிதைப் பேழை

## ஆசாரக் கோவை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறரிடம் நான் ______ பேசுவேன்.

அ. கடுஞ்சொல் **ஆ. இன்சொல்** இ. வன்சொல் ஈ. கொடுஞ்சொல்

2. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது _______ ஆகும்.

அ. வம்பு ஆ. அமைதி இ. அடக்கம் **ஈ. பொறை**

3. அறிவு +உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்____

**அ. அறிவுடைமை** ஆ. அறிவுஉடைமை இ. அறியுடைமை ஈ. அறிஉடைமை

4. இவை + எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______

அ. இவைஎட்டும் **ஆ. இவையெட்டும்** இ. இவ்வெட்டும் ஈ. இவ்எட்டும்

5. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __

அ. நன்றி+ யறிதல் **ஆ. நன்றி + அறிதல்** இ. நன்று + அறிதல் ஈ. நன்று+அறிதல்

6. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

அ. பொறுமை+உடைமை ஆ.பொறை+யுடைமை

இ. பொறு+யுடைமை **ஈ. பொறை+உடைமை**

7. ஆசாரக் கோவையின் ஆசிரியர்______

அ. கணிதமேதாவியார் ஆ. காரியாசான்

இ. **பெருவாயின் முள்ளியார்** ஈ. பொய்கையார்

**குறுவினாக்கள்**

**1. எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது எது?**

எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது துன்பம்.

**2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?**

நாம் நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ள வேண்டும்.

**3. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?**

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல், பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல், இனிய சொற்களைப் பேசுதல், எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாதிருத்தல், கல்வி அறிவு பெறுதல், பிறருக்கு உதவுதல், அறிவுடையவராய் இருத்தல், நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.

## கண்மணியே கண்ணுறங்கு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. பாட்டி+சைத்து ஆ. பாட்டி+இசைத்து

இ. **பாட்டு + இசைத்து** ஈ. பாட்டு+சைத்து

2. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____

அ. **கண் + உறங்கு** ஆ. கண்ணு+உறங்கு

இ. கண் + றங்கு ஈ. கண்ணு + றங்கு

3. வாழை + இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________

அ. **வாழையிலை** ஆ. வாழைஇலை இ. வாழைலை ஈ. வாழிலை

4. கை + அமர்த்தி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______

அ. கைமர்த்தி ஆ.கைஅமர்த்தி இ. **கையமர்த்தி** ஈ. கையைமர்த்தி

5. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்______

அ. **மறைந்த** ஆ. நிறைந்த இ. குறைந்த ஈ. தோன்றிய

6. முத்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ______

அ. மு+தமிழ் ஆ. முத்து+தமிழ்

இ. முத்து+அமிழ் **ஈ. மூன்று+தமிழ்**

**குறுவினா.**

**1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?**

தாலாட்டுப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன.

**2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?**

இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று வாழைஇலை விரித்து அறுசுவை உணவளித்துாபசாரம் செய்ய வேண்டும் என நாட்டுப் புறப்பாடல் கூறுகிறது.

**3. சேர, சோழ, பாண்டிய நாடுகளில் சிறப்புப் பெற்றவை யாவை?**

சேர நாட்டில் சிறப்புடையவை முத்தேன். அவை கொம்புத்தேன், பொந்துத்தேன், கொசுத்தேன் என்பன.

சோழ நாட்டில் சிரப்புடையவை முக்கனி. அவை மா, பலா, வாழை ஆகும்.

பாண்டிய நாட்டுக்குச் சிறப்புத் தருவன முத்தமிழ். அவை இயல், இசை, நாடகம் ஆகும்.

**4. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறார்?**

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடு உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூப் பதித்த தந்தத்தாஅல் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உனவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி, அணை

கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக! என்று, தாய் தன் குழந்தையைப் பாராட்டுகிறாள்.

**5. வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுக்க.**

**வாய்மொழி இலக்கிய வகைகள்:** மீனவர் பாடல், வேட்டுவ்வரி, குரலைப் பாட்டு, குன்றக் குரவை, அம்மானை, ஊஞ்சற்பாடல், உலக்கைப் பாட்டு, கும்மி, தாலாட்டு.

## உரைநடை உலகம்

## தமிழர் பெருவிழா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்துஎழுதுக.**

1. கதிர் முற்றியதும் ______ செய்வர்.

**அ. அறுவடை** ஆ. உரமிடுதல் இ. நடவு ஈ. களையெடுத்தல்

2. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் _______ கட்டுவர்.

அ. செடி ஆ. கொடி **இ. தோரணம்** ஈ. அலங்கார வளைவு

3. பொங்கல்+ அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்________

அ. **பொங்கலன்று** ஆ. பொங்கல்அன்று

இ. பொங்கலென்று ஈ. பொங்கஅன்று

4. போகிப் பண்டிகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்_______

அ. **போகி +பண்டிகை** ஆ. போ+பண்டிகை

இ.போகு + பண்டிகை ஈ. போகிப்+பண்டிகை

5. பழையன கழிதலும் ______ புகுதலும்.

அ. **புதியன** ஆ. புதுமை இ. புதிய ஈ. புதுமையான

6. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும்

பட்டுப்போன மரத்தைக் காண்பது ______ தரும்.

அ. அயர்வு ஆ. கனவு **இ. துன்பம்** ஈ. சோர்வு

7. ______ நன்றி கூறிச் சிறப்புச் செய்யும் விழா பொங்கல் விழா.

அ. **கதிரவனுக்கு** ஆ. சந்திரனுக்கு இ. முருகனுக்கு ஈ. விரருக்கு

8. _________மாதத்தின் கடைசி நாள் போகிப் பண்டிகை.

அ. **மார்கழி** ஆ. தை இ. மாசி ஈ. பங்குனி

9. தைம் முதல் நாளில் தொடங்கும் ஆண்டு_______

அ. தமிழ் ஆண்டு ஆ. ஆங்கில ஆண்டு

**இ. திருவள்ளுவர் ஆண்டு** ஈ. சாலிவாகன ஆண்டு

10. திருவள்ளுவர் பொ.ஆ.மு._______இல் பிறந்தார்.

அ. 13 **ஆ. 31** இ. 41 ஈ. 21

**குறுவினா.**

**1. போகிப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?**

“பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள் ஆகும்.

**2. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்று செலுத்துகின்றனர்?**

உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குவதால் உழவர்கள் மாடுகளுக்கு நன்று செலுத்துகின்றனர்.

**3. தமிழர் வழிபாட்டு முறை யாது?**

இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கை முறை ஆகும். இயற்கையைக் கடவுளாக வணங்குதல் தமிழர் மரபு. தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையைப் போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும்.

**4. அறுவடைத் திருநாள் – குறிப்பு வரைக.**

உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். தைத்திங்களில் அறுவடை செய்து பயனடைவர். தைத்திங்கள் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே இத்திருவிழாவை அறுவடைத் திருவிழா என்பர்.

**5. மஞ்சு விரட்டு பற்றி எழுதுக.**

மாட்டுப் பொங்கள் நாளிலோ அதற்கு அடுத்த நாளிலோ சில ஊர்களில் மஞ்சு விரட்டு நடைபெறும். மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு மாடு பிடித்தல்,ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுத என்றும் அழைக்கப்படுகிறது.

**6. காணும் பொங்களை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?**

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். மக்கள் இந்நாளில் உற்றார் உறவினர் மற்றும் நண்பர் விடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர்; குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர்; மேலும் பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர்; விளையாட்டுப் போட்டிகள் நட்த்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

**7. விழாக்களினால் விளையும் பயன்கள் யாவை?**

உறவுகள் ஒன்றுகூடிக் கொண்டாடும் விழாக்கள் மனத்திற்கு மகிழ்வைத் தரும்;மனிதரிடையே ஒற்றுமையை வளர்க்கும். தமிழரின் நாகரிகம், வீரம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவை நமது பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்றன.

**8. போகித் திருநாள் அன்றும் இன்றும் கொண்டாடப்படும் முறை பற்றி எழுதுக.**

வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக் கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப் பண்டிகை இந்திர விழாவாகக் கொண்டாடப்பட்டது.

“பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள்.இது இன்றையமுறை.

**9. பொங்கல் திருநாளை மக்கள் எங்ஙனம் கொண்டாடுகின்றனர்?**

தைம் மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாள் ஆகும். மக்கள் இத்திருநாளன்று வாசலில் வண்ணக் கோலமிடுவர்; மாவிலைத் தோரணம் கட்டுவர்; புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்திரி, நெய் சேர்த்துப் பொங்கலிடுவர். பொங்கல் என்பதற்குப் பொங்கிப்பெருகி வருவது என்றுப் பொருள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் “பொங்கலோ பொங்கல்” என்று மங்கல ஒலி எழுப்பிப் போற்றுவர். பொங்கல் பொங்கி வருவது போல் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கிப் பெருகும் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். பின்னர்த் தலைவாழை இலையிட்டுப் பொங்கலைப் படைப்பர். கரும்பு, மஞ்சள் கொத்து, தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு ஆகியவற்றை வைத்து வழிபடுவர். விளைச்சலுக்குக் காரணமான கதிரவனை நன்றியோடு வணங்கி மகிழ்வர். சர்க்கரைப் பொங்கலை அனைவருக்கும் அளித்துத் தாமும் உண்டு மகிழ்வர்.

**10. மாட்டுப் பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?**

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மக்கள், மாட்டுப் பொங்கலன்று மாடுகளை நீராட்டுவர்; கொம்புகலைச் சீவி வண்ணங்கள் தீட்டுவர்; மாடுகளின் கழுத்திலே மணிகளைக் கட்டுவர்; பூவும் தழையும் சூட்டுவர்; மாட்டுக்கு மஞ்சள், குங்குமம் இடுவர்; பொங்கல், தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்குப் போன்றவற்றைப் படைத்து வழிபடுவர்.

**தேசிய விழாக்கள்**

1. தேசிய இளைஞர் நாள் விழா - ஜனவரி 12
2. குடியரசு நாள் விழா - ஜனவரி 26
3. விடுதலை நாள் விழா - ஆகஸ்டு 15
4. ஆசிரியர் தின விழா - செப்டம்பர் 5
5. காந்தி பிறந்த நாள் விழா - அக்டோபர் 2
6. மாணவர் தின விழா - அக்டோபர் 15
7. குழந்தைகள் தின விழா - நவம்பர் 15

**தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடைபெறும் இடங்கள்:**

அலங்காநல்லூர், மதுரை மாவட்டம் அவனியாபுரம், உறங்கான்பட்டி, வாடிப்பட்டி, சிறுகுடி, காரைக்குடி.

**தலங்களும் காண வேண்டிய இடங்களும்**

1. **சென்னை** : கடற்கரை, அண்ணா நூலகம், கிண்டி, பார்த்தசாரதிப் பெருமாள் கோவில், வள்ளுவர் கோட்டம், மயிலாப்பூர்.
2. **மதுரை** : மீனாட்சி கோவில், அழகர் கோவில், திருப்பரங்குன்றம், காந்தி அருங்காட்சியகம், திருமோகூர், யானைமலை, திருமலைநாயக்கர் அரண்மனை, தூய மரியன்னை பேராலயம்.
3. **திருச்சிராப்பள்ளி** : மலைக்கோட்டை, திருவனைக்கா, திருவரங்கம், கல்லணை, தூயவளனார் பேராலயம்.
4. **தஞ்சாவூர்** : பெரிய கோவில், தமிழ்ப் பல்கலைக்கழகம், சரசுவதி மகால்.
5. **இராமேசுவரம்** : கோயில், கடற்கரை
6. **மாமல்லை** : சிற்பங்கள், கடற்கரை
7. **குற்றாலம்** : அருவிகள், சித்திரசபை
8. **கொடைக்கானல்** : ஏரி, குறிஞ்சியாண்டவர் கோயில், செண்பகனூர்.
9. **உதகமண்டலம்** : குன்னூர், தொட்டபெட்டா
10. **முதுமலைக்காடு** : விலங்குகள் சரணாலயம்.

## மயங்கொலிகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சிரம் என்பது ________ (தலை/தளை)

**விடை: தலை**

2. இலைக்கு வேறுபெயர் _______ (தளை/ தழை)

**விடை: தளை**

3. வண்டி இழுப்பது _______ (காலை/ காளை)

**விடை: காளை**

4 கடலுக்கு வேறுபெயர் _______ (பரவை/ பறவை)

**விடை: பரவை**

5. பறவை வானில் _________ (பரந்தது/ பறந்தது)

**விடை: பறந்தது**

6. கதவை மெல்லத் _______ (திரந்தான்/ திறந்தான்)

**விடை: திறந்தான்**

7. பூ ________ வீசும். (மணம்/ மனம்)

**விடை: மணம்**

8. புலியின் ________ சிவந்து கானப்படும். (கன்/ கண்)

**விடை: கண்**

9. குழந்தைகள் _______ விளையாடினர். (பந்து/ பன்து)

**விடை: பந்து**

10. வீட்டு வாசலைல் ______ போட்டனர். (கோலம்/ கோளம்)

**விடை:கோலம்**

**குறுவினா.**

**1. மயங்கொலி என்றால் என்ன? மயங்கொலி எழுத்துக்கள் யாவை?**

சில எசுத்துக்கள் உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கும். ஆனால் அவற்றுக்கு இடையே வேறுபாடு உண்டு. இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.

ண ன ந, ல ழ ள, ர ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

**2. ண, ன, ந இவை எவ்வாறு பிறக்கின்றன?**

ண - நாவின் நுனி மேலாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன - நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந - நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

**3. ண், ந்,ன் – இவெழுத்துக்கள் எச்சொல்லால் குறிக்கப்படுகின்றன?**

(ட், ண்) (த்,ந்) (ற்,ன்) ஆகியவை இன எழுத்துகள்.

டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,

தகரத்தை அடுத்து வரும் நகரம் தந்நகரம் என்றும், றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

**4. ல –எழுத்து எம்முயற்சியால் பிறக்கின்றது? எவ்வாறு குறிக்கப்படுகின்றது?**

ல – நாவின் இருபக்கங்கள் தடித்து மேற் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும்.

இடையின எழுத்துகளான ல, ழ,ள என்னும் மூன்றனுள், வரிசை முறையில் முதலில் இருப்பது 'ல' ஆகும். எனவே இது முதல் லகரம் எனப்படுகிறது.

**5. ள – எழுத்து எம்முயற்சியால் பிறக்கிறது? அது எவ்வாறு குறிக்கப்படுகிறது?**

ள – நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம்.

**6. ழ – எழுத்து எம்முயற்சியால் பிறக்கிறது? அது எப்படிக் குறிக்கப்படுகிறது?**

ழ- நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். 'ழ' தமிழுக்கே சிறப்பானது. எனவே சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம்.

**7. ர – எழுத்து எம்முயற்சியால் பிறக்கிறது? அதை எவ்வாறு குறிக்கிறோம்?**

ர – நாவின்நுனி, மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது. இஃது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

**8. ற –எழுத்து எவ்வகையில் பிறக்கிறது? அதை எப்படிக் குறிப்பிடுகிறோம்?**

ற – நாவின்நுனி, மேல் அண்ணத்தில் மையப் பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இஃது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

## வாழ்வியல்

## திருக்குறள்

**சரியான விடையத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?

**அ. நம் முகம் மாறினால்** ஆ. நம் வீடு மாறினால்

இ. நாம் நன்கு வரவேற்றால் ஈ. நம் முகவரி மாறினால்

2. நிலையான செல்வம் _____

அ. தங்கம் ஆ. பணம் **இ. ஊக்கம்** ஈ. ஏக்கம்

3. ஆராயும் அறிவு உடையவர்கள் ______ சொற்களைப் பேசமாட்டார்.

அ. உயர்வான ஆ. விலையற்ற **இ. பயன்தராத** ஈ. பயன்உடைய

4.பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. பொருளு+டைமை ஆ. பொரு+ளுடைமை

இ. **பொருள்+உடைமை** ஈ. பொருள்+ளுடைமை

5. உள்ளுவது+எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. உள்ளுவதுஎல்லாம் ஆ. **உள்ளுவதெல்லாம்**

இ. உள்ளுவத்தெல்லாம் ஈ. உள்ளுவதுதெல்லாம்

6. பயன்+இன என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ. பயனிலா** ஆ.பயன்னில்லா இ. பயன்இல ஈ. பயன்இல்லா

**எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

| | | |
|---|---|---|
| **எதுகை:** | **உள்**ளுவது, **தள்**ளினும் | **தள்**ளினும், **தள்**ளாமை |
| **மோனை:** | **உ**ள்ளுவது, **உ**யர்வுள்ளல் | **த**ள்ளினும், **த**ள்ளாமை |

**இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

**1.** பணிவுடையான் ஆதல் இன்சொலன் ஒருவற்கு

மற்றுப் பிற அணியல்ல.

**விடை:**

பணிவுடையான் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணியல்ல மற்றுப் பிற.

2. உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது

தள்ளாமை தள்ளினும் நீர்த்து

**விடை:**

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

**"ஊக்கமது கைவிடேல்" என்பது ஔவையாரின் ஆத்திசூடி தொடர்புடைய திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று.

winmeen.com

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**

**நில்லாது நீங்கி விடும்.**

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க

சொல்லில் பயன்இலாச் சொல்

**குறுவினா.**

**1. எப்படி உண்பது விரும்பத்தக்கது?**

அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று. எனவே, விருந்தோடு சேர்ந்து உண்பது விரும்பத்தக்கது.

**2. விருந்தினரின் மனம் எத்தன்மையானது என வள்ளுவர் கூறுகிறார்?**

மோந்து பார்த்தால் அனிச்ச மலர் வாடிவிடும். நம் முகம் மாறினாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும் என வள்ளுவர் கூறுகிறார்.

**3. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகிறார்?**

அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பதுகூட தீமையானது என்று வள்ளுவர் கூறுகிறார்.

**4. களவினால் சேர்க்கும் என்ன ஆகும்?**

களவு மூலம் சேர்க்கப்படும் செல்வம் வளர்வது போலத் தோன்றினாலும் முடிவில் அழிந்துவிடும்.

**5. எது நிலையான செல்வம் என்று வள்ளுவர் கூறுகிறார்?**

ஊக்கமே நிலையான செல்வம். மற்றவை எல்லாம் நிலைத்து நில்லாமல் அழிந்து விடும்.

**6. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?**

தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமானது தானே வழிகேட்டுக் கொண்டு செல்லும்.

**7. எந்த உவமையின் மூலம் ஊக்கம் உடைமையின் உயர்வினை வள்ளுவர் விளக்குகிறார்?**

தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். அதுபோல, ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள் என வள்ளுவர் விளக்குகிறார்.

**8. எண்ணத்தின் சிறப்பு யாது?**

எண்ணுவதை உயர்வாகவே என்ன வேண்டும். எண்ணியதை அடையாவிட்டாலும் எண்ணமே மனநிறைவைத் தரும்.

**9. அறிவுடையார் இயல்பு யாது?**

நன்மை எது என ஆராயும் அறிவு உடையவர்கள் பயன்தராத சொற்களைப் பேசமாட்டார்கள்.

**10. நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?**

பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக என வள்ளுவர் கூறுகிறார்.

**11. திருக்குறள் உலகப் பொதுமறை எனப்படுவது ஏன்?**

படிப்பதற்கு எளிதாய் உணர்வதற்கு அரிதாய் விளங்குவது திருக்குறள். உலகத்து விளங்கும் மொழிகளில் பெரும்பாலான மக்கள் பேசுகிற மொழியல்ல. எனினும் உலகத்து மக்கள் நேசிக்கிற மொழியாய்த் தமிழ் திகழ்கிறது. காரணம் என்ன? திருக்குறள் தான்.

**'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**

**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'**

எனப்பாடினார் மகாகவி பாரதியார்.

தமிழ்மறை எனப் போற்றப்படும் திருக்குறள் உலகப் பொதுமறையாகவும் திகழ்கிறது. ஏனெனில் திருக்குறள் ஒரு மதத்தினருக்கோ ஒரு மொழியினருக்கோ ஒரு இனத்தினருக்கோ உரியதல்ல.

எம்மதத்தவர் கடவுள் குறித்தும் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் பாடவில்லை. இறைவனின் திருவடிகளைப் பற்றி மட்டுமே. 'நற்றாள், மாணடி' என்று அடைமொழி கொடுத்தும் அடி, தாள் என அடைமொழி கொடுக்காமலும் கூறுகிறார்.

குறள் தமிழில் அமைந்தது எனினும் தமிழ் என்னும் சொல்லோ மொழி பற்றிய செய்தியோ நூலில் இல்லை.

அறநெறி எல்லாக் காலத்திற்கும் எல்லா நாட்டினருக்கும் எல்லா மதத்தவருக்கும் எல்லா மொழியினருக்கும் எல்லாச் சாதியினருக்கும் பொதுதான். அதையே வள்ளுவர் கூறுகிறார். திருக்குறளுக்கு அமைந்த வேறு பெயர்களுள் 'அறம்' என்பதும் ஒன்று.

எனவே திருக்குறள் உலகப் பொதுமறை என உலகத்தவரால் போற்றப்படுகிறது. இதற்குச் சான்று யாது? உலகத்தில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் அறநூல் திருக்குறள்.

## 3. கூடித் தொழில் செய்

## கவிதைப் பேழை

## நானிலம் படைத்தவன்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ________

அ. மகிழ்ச்சி ஆ. துன்பம் இ. வீரம் ஈ. அழுகை.

2. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. கல் + அடுத்து **ஆ. கல் +எடுத்து**

இ. கல்+லடுத்து ஈ. கல் +லெடுத்து

3. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. நா+னிலம் **ஆ. நான்கு+நிலம்** இ. நா+நிலம் ஈ. நான்+நிலம்

4. நாடு+ என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ. நாடென்ற** ஆ. நாடன்ற இ. நாடுஎன்ற ஈ. நாடுஅன்ற

5. கலம்+ ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்________-

அ. கலம்ஏறி ஆ. கலமறி இ. கலன்ஏறி **ஈ. கலமேறி**

6. பெருவெலி என்னும் தொடர்ச் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ. பெரிய+வெளி ஆ. பெரு+வெளி

இ. **பெருமை+வெளி** ஈ. பெருகு+வெளி

7. திண்டோள் என்பது _____ எனப் பிரியும்.

அ. திண்+தோள் ஆ. திண்டு+தோள்

**இ. திண்மை+தோள்** ஈ. திண்ணிய+தோள்

8. மாந்தன்+அவன் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ. மாந்தனவன்** ஆ. மாந்தனவான் இ. மாந்தவலன் ஈ. மாத்தனவன்

9. முத்தெடுத்தான் என்பது ______ எனப் பிரியும்.

அ. **முத்து+எடுத்தான்** ஆ. முத்தம்+எடுத்தான்

இ. மும்மை+எடுத்தான் ஈ. மு+எடுத்தான்

10. முடியரசன் இயற்பெயர்______

அ. கனகராசு ஆ. சுப்புராசு **இ. துரைராசு** ஈ. வீரராசு

**குறுவினா.**

**1. நான்கு நிலங்கள் யாவை?**

நான்கு நிலங்கள் என்பன முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என்பன.

**2. தமிழன் எதற்கு அஞ்சினான்?**

தமிழன், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சினான்.

**3. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?**

தமிழன் வாணிகத்திற்காக ஏலம், மிளகு ஆகியவற்றைக் கப்பல்களில் ஏற்றிக் கண்டங்களைச் சுற்றி வந்தான்; போருக்காகவும் சுற்றி வந்தான்.

**4. முடியரன் – குறிப்புத் தருக.**

முடியரசனின் இயற்பெயர் துரைராசு. பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார். திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப்பெற்றவர் அவர்.

**5. தமிழன், தான் வளர்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?**

தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்; தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான்; ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான்; முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்தினான்.

**6. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?**

பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான்; அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான்; பனி சூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான்; ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான்; ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான்; கப்பலில் உலகை வலம் வந்தான்; அவன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுவான் என முடியரசர் கூறுகிறார்.

**குறிஞ்சி, முலை, மருதம், நெய்தலுக்கு உரிய நிலங்களை அறிந்து எழுதுக.**

**குறிஞ்சி** : மலையும் மலை சார்ந்த இடமும்

**முல்லை** : காடும் காடு சார்ந்த இடமும்

**மருதம்** : வயலும் வயல் சார்ந்த இடமும்.

**நெய்தல்** : கடலும் கடல் சார்ந்த இடமும்

## கவிதைப்பேழை

## கடலோடு விளையாடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கதிர்ச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. கதிர்ச்+சுடர் ஆ. கதிரின்+சுடர்

இ. கதிரவன்+சுடர் **ஈ. கதிர்+சுடர்**

2. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ. **மூச்சு+அடக்கி** ஆ. மூச்+அடக்கி

இ. மூச்+சடக்கி ஈ. மூச்சை+அடக்கி

3. பெருமை+வானம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______

அ. பெருமைவானம் **ஆ. பெருவானம்** இ. பெருமானம் ஈ. பேர்வானம்

4. அடிக்கும்+அலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ. **அடிக்குமலை** ஆ. அடிக்கும் அலை இ. அடிக்கிலை ஈ. அடியலை

5. வெண்மணல் __________ பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. வெண்+மணல் ஆ. **வெண்மை+மணல்**

இ. வெள்ளை+மணல் ஈ. வெள்ளி+மணல்

6. உடல்+போர்வை – சேர்த்து எழுதக் கிடைப்பது______

அ. உடல் போர்வை ஆ. உடப்போர்வை

இ. உடல்ப்போர்வை ஈ. **உடற்போர்வை**

**குறுவினா.**

**1. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?**

மீனவர்கள் அலையைத் தோழனாகவும் மேகத்தைக் குடையாகவும் கருதுகின்றனர்.

**2. கடல் பாடலில் கண்ணாடியாகவும் தலைவனாகவும் குறிப்பிடப்படுவன யாவை?**

கடல் பாடலில் நிலவு கண்ணாடியாகவும் வானம் தலைவனாகவும் குறிப்பிடப்படுகின்றன.

**3. மீனவர்க்கு விளக்கு எது? பள்ளிக்கூடம் எது?**

மீனவர்க்கு விடிவெள்ளியே விளக்கு; கடலே பள்ளிக்கூடம்

**4. மீனவர்க்குப் பஞ்சுமெத்தையும் அவர்கள் காணும் கூத்தும் எவை?**

மீனவர்க்கும் வெண்மணலே பஞ்சுமெத்தை. வானத்தின் இடியே அவர்கள் காணும் கூத்து.

**5. மீனவர்க்கு ஊஞ்சலும் போர்வையும் யாவை?**

பாய்ந்து வரும் புயலே மீனவர்க்கு ஊஞ்சல், பனிமூட்டமே அவர்களுக்குப் போர்வை.

**6. மீனவர்க்கு வீடும் கூரையும் எவை?**

மீனவர்க்குக் கட்டுமரமே வீடு; கதிரவன் ஒளியே கூரை.

**7. கடல் பாடலின் பொருளை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள் மீனவர்கள். அவர்களுக்கு விண்மீன்களே விளக்குகள். விரிந்த கடலே பள்ளிக்கூடம். கடல் அலையே தோழன். மேகமே குடை வெண்மையான மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை. விண்ணின் இடி அவர்கள் காணும் கூத்து. சீறிவரும் புயலோ விளையாடும் ஊஞ்சல். பனிமூட்டம்தான் உடலைச் சுற்றும் போர்வை. அனல் வீசும் கதிரவனின் ஒளிச்சுடர்தான் மேற்கூரை. கட்டுமரம் அவர்கள் வாழும் வீடு. மின்னல் கோடுகளே அடிப்படைப் பாடம். வலைவீடுப் பிடிக்கும் மீன்களே அவர்களது செல்வம். முழு நிலவுதான் கண்ணாடி. மூச்சடக்கிச் செய்யும் நீச்சலே அவர்கள் செய்யும் தவம். இவற்றுக்கு இடையே மீனவர்கள் மன உருதியோடு தொழில் செய்கின்றனர்.

**8. நாட்டுப்புற இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்கள் என்று கூறக் காரணம் என்ன?**

உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே நாட்டுப்புறப் பாடலாகும். காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் இதனை வாய்மொழி இலக்கியம் என்பர். ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு முதலான தொழில்பாடல்களும் விளையாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் முதலியனவும் நாட்டுப்புறப் பாடல்களுள் அடங்கும்.

## உரைநடை உலகம்

## வளரும் வணிகம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்______

அ. **நுகர்வோர்** ஆ. தொழிலாளி

இ. முதலீட்டாளர் ஈ. நெசவாளி

2. வணிகம் + சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

அ. வணிகசாத்து ஆ. வணிகம்சாத்து

**இ. வணிகச்சாத்து** ஈ. வணிகத்துசாத்து

3. பண்டம்+மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ. **பண்டமாற்று** ஆ. பண்டம்மாற்று

இ. பண்மாற்று ஈ. பண்டுமாற்று

4. வண்ணப் படங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______

அ. **வண்ணம்+படங்கள்** ஆ. வண்ணப்+படங்கள்

இ. வண்ண+படங்கள் ஈ. வண்ணமான+படங்கள்

5. விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______

அ. விரி+வடைந்த ஆ. விரி+ அடைந்த

**இ. விரிவு+அடைந்த** ஈ. விரிவ்+அடைந்த

**குறுவினா.**

**1. வணிகம் என்றால் என்ன?**

ஒரு பொருளை பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும்.

**2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

நம் வீட்டிற்கே வந்து பழைய செய்தித்தாள்கள், பயனற்ற நெகிழிப் பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்குப் பதிலாக வீட்டு உபயோகப் பொருள்களைத் தருகின்றனர். இது பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டு.

**3. பண்டமாற்று முறையின் பழைமையை விளக்குக.**

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். ஆட்டின் பாலைக் கொடுத்து தானியத்தைப் பெற்றனர். இந்தச் செய்திகள் சங்க இலக்கியங்கள் காணப்படுக்கின்றன.

**4. சிறு வணிகப் பொருள்கள் யாது?**

நம் அன்றாடத் தேவைகளை பால், கீரை, காய்கறிகள் போன்றவை சிறுவணிகப் பொருள்கள் ஆகும்.

**5. பொருள்களை விற்பவரும் வாங்குபவரும் எவ்வாறு குறிக்கப்படுகின்றனர்?**

பொருள்கள் விற்பவரை வணிகர் என்பர். வாங்குபவரை நுகர்வோர் என்பர்.

**6. தரைவழி வணிகம் என்பது யாது?**

தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு சென்று விற்பது தரைவழி வணிகம் ஆகும். தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு செல்ல எருது, கழுதை, குதிரை போன்ற விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன.

**7. 'வணிகச் சாத்து' என்பது யாது?**

வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்குச் செல்லும் போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை வணிகச் சாத்து என்பவர்.

**8. நீர்வழி வணிகம் என்பது யாது?**

கடல்வழியாகக் கப்பல்கள் மூலம் பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும் நீர்வழி வணிகம் ஆகும்.

**9. துறைமுகம் – குறிப்பு வரைக.**

கப்பல்கள் வந்து நிற்கும் இடங்கள் துறைமுகங்கள் ஆகும். துறைமுக நகரங்கள் பட்டினம் என்றும் பாக்கம் என்றும் குறிக்கப்பட்டன.

**10. தமிழ்நாட்டின் தலைசிறந்த பழைய துறைமுகம் பற்றி எழுதுக.**

தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகப் பூம்புகார் விளங்கியது. அவ்வூர்த் துறைமுகத்தில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் தத்தம் நாட்டுக் கொடிகளோடு வந்து நின்றன. அவற்றின் மூலம் வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தமிழ்நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**11. வணிகர்கள் நேர்மையாகத் தொழில் செய்வர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் எங்ஙனம் எடுத்துக்காட்டுகின்றன?**

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின்.

என்னும் திருக்குறள் வணிகரின் நேர்மையைப் பற்றிக் கூறுகிறது. வணிகர்கள் பொருளை வாங்கும்பொழுது உரிய அளைவைவிட அதிகமாக வாங்க மாட்டர்கள். பிறருக்குக் கொடுக்கும்பொழுது அளவைக் குறைத்துக் கொடுக்க மாட்டார்கள். எனவே வணிகரை

**"நடுவு நின்ற நன்னெஞ்சினோர்"** என்று பட்டினப்பாலை பாரட்டுகிறது.

**12. சிறு வணிகம் ,பெருவணிகம் – வேறுபடுத்துக.**

**சிறுவணிகம்:** சிறு முதலீட்டில் பொருள்களை வாங்கி வந்து வீதிகளில் வைத்து விற்பனை செய்வர். தலையில் சுமந்து சென்று விற்றல், தரைக்கடை அமைத்து விற்றல், தள்ளுவண்டி மூலம் விற்றல் போன்ற முறைகளில் சிறு வணிகம் நடைபெறும். சிறு வணிகர்கள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்பவர்கள் ஆவர்.

**பெருவணிகம்:** பெருந்தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில் திரட்டி வைத்து விற்பனை செய்வது பெருவணிகம் ஆகும். பெருவணிகர்கள் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்வர். அவற்றைச் சிறுவணிகர்களுக்கு விற்பனை செய்வர். பெருவணிகர்களுக்கு நுகர்வோருடன் நேரசித் தொடர்பு இருப்பது அரிது.

**13. பழந்தமிழர் ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருள்கள் யாவை?**

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி எனப்படும். பிற நாடுகளில் இருந்து பொருள்களை வாங்குவது இறக்குமதி ஆகும். பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தேக்கு, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு போன்றவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியாவில் இருந்து குதிரைகள் வாங்கப்பட்டன.

**14. இணைய வழி வணிகம் பற்றி எழுதுக.**

கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்க நேரம் இல்லாதவர்களுக்கு இணைவழி வணிகம் உதவுகிறது. இணையதளம் மூலம் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பல உள்ளன. இவற்றி இணையதளப் பக்கத்தில் நமக்குத் தேவையான பொருள்களைப் பற்றிய விவரங்கள் இருக்கும். பொருள்களின் தரம், விலை, சிறப்பு ஆகியவற்றைப் பிற நிறுவனப் பொருள்களொடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். நமக்குப் பிடித்த பொருள்களை நம் வீட்டிற்கே வரவழைக்கலாம். பொருளைப் பெற்றுக் கொண்ட பிறகு பணம் செலுத்தலாம். மின்னணுப் பரிமாற்றம் மூலமும் பணத்தைச் செலுத்தலாம்.

**ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக.**

| **ஆங்கிலச் சொல்** | **தமிழ்ச்சொல்** |
|---|---|
| கரன்சிநோட் | பணத்தாள் |
| பேங்க் | வங்கி |
| செக் | காசோலை |
| டிமாண்டி டிராப்ட் | வரைவோலை |
| டிஜிட்டல் | மின்னணுமயம் |
| டெபிட் கார்டு | கடன் அட்டை |
| கிரெடிட் கார்டு | பற்று அட்டை |
| ஆன்லைன் ஷாப்பிங் | இணையத்தள வணிகம் |

**ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கும் சிறப்புப் பொருள்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துக.**

1. மதுரை – மல்லிகை
6. திருநெல்வேலி - அல்வா

2. சேலம் - மாம்பழம்
3. கோவில்பட்டி- கடலை மிட்டாய்
4. திருப்பூர் - பனியன்
5. நாமக்கல் -முட்டை
7. மணப்பாறை- முறுக்கு
8. பழநி - பஞ்சாமிர்தம்
9. திருப்பதி - லட்டு
10. தூத்துக்குடி - உப்பு

## விரிவானம்

## உழைப்பே மூலதனம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. என் வீடு **அங்கே** உள்ளது. (அது/ அங்கே)

2. தம்பி **இங்கே** வா. (இவர்/ இங்கே)

3. நீர் **எங்கே** தேங்கி இருக்கிறது? (அது / எங்கே)

4. யார் **அவர்** தெரியுமா? (அவர்/ யாது)

5. உன் வீடு **எங்கே** அமைந்துள்ளது? (எங்கே/ என்ன)

**குறுவினாக்கள்.**

**1. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?**

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துக்களுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர். அ,இ,உ ஆகிய முன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால் 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

**2. அகச்சுட்டு : விளக்குக.**

இவன், அவன், இது, அது – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே(அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

**3. புறச்சுட்டாவது யாது? விளக்குக.**

அந்நீர்வீழ்ச்சி, இம்மலை, இந்நூல் – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

**4. அண்மைச் சுட்டு –விளக்குக.**

இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு – இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே இவை அண்மைச் சுட்டு எனப்படும். அண்மைச்சுட்டு எழுத்து இ ஆகும்.

**5. சேய்மைச் சுட்டினை விளக்குக.**

அவள், அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் – இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே இவை சேய்மைச்சுட்டு எனப்படும் சேய்மைச் சுட்டு எழுத்து அ ஆகும்.

**6. சுட்டுத்திரிபு – விளக்குக.**

அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும். (எ.கா) அந்த வீடு – இந்தப்பள்ளி.

**7. வினா எழுத்துகள் யாவை? அவை சொற்களில் எவ்விடங்களில் அமையும்?**

வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர். சிலவினா எழுத்துகள் சொல்லின் முதலில் இடம்பெறும். சில வினா எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும்.

எ,யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.

மொழியில் முதலில் வருபவை - எ, யா (எங்கு, யாருக்கு)

மொழியின் இறுதியில் வருபவை – ஆ,ஆ (பேசலாமா, தெரியுமோ)

மொழி முதலிலும் இறுதியிலும் வருவது – ஏ (ஏன், நீ தானே?)

**8. அகவினா - விளக்குக.**

வினா எழுத்து சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருமானால் அது அகவினா எனப்படுகும்.

எ.கா. எது, யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகளுக்குப் பொருள் இல்லை.

**9. புறவினா – விளக்குக.**

வினா எழுத்து சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருமானால் அது புறவினா எனப்படும்.

எ.கா. அவனா, வருவானோ இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

**10. அகவினா, புறவினா – வேறுபாடு யாது?**

அகவினா அமைந்த சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள்பொருள் தரமாட்டா. புறவினா அமைந்த சொற்களில் வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் சொற்களாய் நின்று பொருள் தரும்.

**11. அகச்சுட்டு, அகவினா, புறச்சுட்டு, புறவினா என்று பெயரிட்ட காரணத்தை எழுதுக.**

அகச்சுட்டு, அகவினா என்பவற்றில் அகம் என்பது உள்ளே எனப் பொருள் தருகிறது. சுட்டு எழுத்துகளும் வினா எழுத்துகளும் சொல்லுக்கு உள்ளேயே-சொல்லைவிட்டுப் பிரிக்க முடியாதபடி சேர்ந்து -நின்று பொருள் தரும். அவை அகச்சுட்டு , அகவினா எனப்படும்.

புறச்சுட்டு, புறவினா என்பவற்றில் புறம் என்பது வெளியே எனப் பொருள் தருகிறது. சுட்டு எழுத்துகளும் வினா எழுத்துகளும் சொற்களுக்கு வெளியே நிற்கும். அவற்றைப் பிரித்தாலும் சொற்கள் பொருள் தரக்கூடிய முறையில் அமையும். புறச்சுட்டு, புறவினா என்று அவை பெயர் பெறும்.

**பின்வரும் நவமணிகளை அகரவரிசைப்படுத்து எழுதுக.**

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

**கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.**

**பண்டைத் தமிழகத்தின் துறைமுகங்கள் பற்றியும் அங்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பற்றியும் எழுதுக.**

தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி. இது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில்

கலக்குமிடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகமாகும். முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது. யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு 'யவனப்பிரியா' என்ற பெயர் ஏற்பட்டது. யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதர்காக முசிறிக்கு வந்தன. இதனை,

சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின் மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருக்கிறது.

"பல்வேறு நாடுகளிலிருந்து கடல் வழியாக கப்பல்கள் மூலம் வந்து இறங்கிய பொருள்களும், வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உள்நாட்டின் பலபகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொருள்களும் எண்ண முடியாத அளவுக்குக் குவிந்திருக்கும்; புகார் நகரத்தில், காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருக்கும் சாலையில்,சுங்கத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, சோழப் பேரரசின் இலச்சினையான புலிச்சின்னத்தை அடையாளமிட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவிந்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும்."

பாண்டிய நாட்டில் கொர்கைக் குடாக் கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்துகல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச்சிப்புகளும் சங்குகளும் உண்டாயின.

பாண்டிய மன்னர்களின் குதிரைப்படைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000 அரேபிக் குதிரைகள் வந்து இறங்கும்.